**செய்தி வெளியீடு எண்: 560** **நாள்: 20.08.2018**

இந்திய பாராளுமன்றம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை 15.06.2005 அன்று இயற்றியதைத் தொடர்ந்து, அச்சட்டம் 12.10.2005 முதல் இந்தியா முழுவதும் (ஜம்மு & காஷ்மீர் மாநிலம் நீங்கலாக) நடைமுறைக்கு கொணரப்பட்டுள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு கொணரப்பட்டு பதிமூன்று ஆண்டுகள் முடிவடைய உள்ளன. இத்தகவல் அறியும் உரிமைச் சட்டம் வாயிலாக, எந்தவொரு இந்திய குடிமகனும் தடைசெய்யப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட இனங்கள் குறித்த ஆவணங்கள்/தகவல்கள் நீங்கலாக ஏனைய இனங்கள் குறித்த தகவல்கள், ஆவண நகல்கள் முதலியவற்றினை பெற அதிகாரமுள்ளது. இச்சட்டத்தின் வாயிலாக, மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு நலத்திட்டங்கள், அரசு ஆவணங்களில் உள்ள தகவல்கள், நிர்வாக நடைமுறைகள் முதலியனை குறித்து சாதாரண குடிமகன் அறிந்து கொள்ளவும், அதன் மூலமாக தங்களது மற்றும் பொது மக்களது கோரிக்கை குறித்து நிவாரணம் பெறவும் தகவல்கள் மற்றும் ஆவண நகல்கள் பெற ஏதுவாக அமைந்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவின் கீழ் தகவல்கள் பெற்றதன் மூலம் தனிநபரது கோரிக்கை குறித்தோ அல்லது பொது மக்களது கோரிக்கை தொடர்பாகவோ, அதிக அளவில் பயன்பெற்றது தொடர்பாக தெரிவு செய்யப்பட உள்ள தகுதிவாய்ந்த "வெற்றி கதைகளுக்கு" அண்ணா மேலாண்மை நிலையம் ரொக்கத் தொகையும் நினைவு பரிசும் வழங்க உள்ளது. எனவே, இந்நேர்வு குறித்து தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் குறிப்பான தகவல்கள் ஆகியவைகளை 14.09.2018-க்குள், திரு அ.சண்முக சுந்தரம், கூடுதல் இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறை கூடுதல் இயக்குநர், எண்:163/1, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை (கிரீன்வேஸ் சாலை), இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028 எனும் முகவரிக்கு " RTI ACT Case Studies for Award" என உறையின் முகப்பில் எழுதி துரித அஞ்சல் அல்லது ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கலாம்.

தனிநபர் கோரிக்கை தொடர்பாக 10 இனங்களுக்கும், பொதுமக்கள் கோரிக்கை தொடர்பான 10 இனங்களுக்கும், ஆக மொத்தம் 20 இனங்களுக்கு, ரொக்கத் தொகை ரூ.5,000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) மற்றும் நினைவுப் பரிசு, ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட இனங்களுக்கான மேற்படி ரொக்கத் தொகை மற்றும் நினைவுப் பரிசு தகவல் அறியும் உரிமைச் சட்டம் நாள் அனுசரிக்கப்பட உள்ள 2018, அக்டோபர் திங்கள் 12-ஆம் தேதி அளிக்கப்பட உள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**